பக்கங்கள் : நான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 21 புதன்கிழமை (04.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 128

# பாதுகாப்புப் பொறுப்பை தகுதியானோரிடம் ஒப்படைத்து தேசத்தைக் காப்பாற்றுங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் நாடாளுமன்றத்தில் இறைஞ்சல்



கொழும்பு, ஏப்ரல் 04

வான் தாக்குதல் மூலம் புலிகளின் வலிமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒருபுறம் அமைதி வழித் தீர்வு எனக் கூறிக்கொண்டு மறுபுறம் இராணுவத் தீர்வை நாடும் மஹிந்த அரசின் இரட்டை வேடமும் இப்போது அம்பலமாகி வருகிறது. இதனால் இலங்கை சர்வதேச ஆதரவையும் முற்றாக இழந்துவிட்டது. இராணுவத் தீர்வு சாத்தியமல்ல என்பது நிருபணமாகிவரும் இச்சமயத்தில், நாம் மேலும் இராணுவ இழப்புகளைச் சந்தித்து பேச்சு மேசையில் மேலும் வலுவிழக்காமல் இருக்கவேண்டுமானால், நாட்டின் தேசியப் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் மாற்றப்பட்டு, தகுதியானோரிடம் அது கையளிக்கப்பட வேண்டும். அதன் மூலமே நாட்டின் பாதுகாப்பை நாம் உறுதிப்படுத்த முடியும். எனவே, அதைச் செய்யுங்கள்.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் இறைஞ்சினார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்று நாடாளுமன்றத்தில் கவனஈர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்துப் பேசும்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அந்தஉரையின்முக்கிய பகுதிகள்வருமாறு:-

முதல் தடவையாகப் புலிகள் வான் வழித் தாக்குதலை நடத்தியிருக்கின்றார்கள். நாட்டின் ஏதோ ஓர் இடத்தில் ஓர் இலக்கைத் தெரிவுசெய்து, அதற்கு வான் வழியாகச்சென்று எதிர்ப்பின்றி அதை அழிக்கும் வல்லமையைப் புலிகள் இப்போது கொண்டிருக்கின்றார்கள் என்பதே இதன் அர்த்தமாகும்.

'மிக்' மற்றும்கிபிர்விமானங்களைஅழிக்கப் புலிகள் தவறிவிட்டனர் என்று கூறி சம்பவங்களை மூடி மறைக்கவோ அல்லது உண்மைகளை மறைக்கவோ உரிய நேரமில்லை இது.

இவ்விடயத்தில்சம்பந்தப்பட்டுள்ளபாதுகாப்புப் பிரச்சினைகளை 'இந்து' செய்திப் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில்-

''.....தமிழீழ விடுதலைப் புலிகளின் மரபுவழி யுத்த முனைகளையும் கொரில்லா யுத்த மார்க்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட வலிமையை எதிர்கொண்டு தீவிரமாக இலங்கை மோதி வருகின்றது எனக் குறிப்பாகக் கூறப்படும் இச்சமயத்தில் - இலங்கையின் தயார் நிலைமை மோசமாக இருந்ததை புலிகளின் இந்தத் திடீர்த் தாக்குதல் வெளிப்படுத்தியிருக்கின்றமைதான் - இவ்விடயத்திலிருந்து

(03 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத ஒழிப்புத் தந்திரோபாயத்தில் ஒன்றிணைய 'சார்க்' நாடுகளுக்கு அழைப்பு

### பொதுவான நாணயத்தை அறிமுகப்படுத்தவும் ஜனாதிபதி மஹிந்த யோசனை



புதுடில்லி, ஏப்.4

பிராந்தியம் முழுவதுக்கும் அச்சுறுத்தலாக மாறியிருக்கும் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான பயங்கரவாத எதிர்ப்புத் தந்திரோபாயத்தில், கூட்டாகச்செயற்பட முன்வருமாறு 'சார்க்' நாடுகளுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

புதுடில்லியில் நேற்று ஆரம்பமாகிய 'சார்க்' நாடுகளின் தலைவர்களது உச்சிமாநாட்டில் உரைநிகழ்த்தியபோதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த அழைப்பை விடுத்தார்.

புதுடில்லியில் இருதினங்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை, பூட்டான், மாலைதீவு ஆகிய ஏழு நாடுகளின் தலைவர்களும் (04ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. பரீட்சை முடிவுகளை இணையத்தில் பார்ப்பதில் நெருக்கடி

### வேம்படி, யாழ். இந்து முன்னிலையில்

யாழ்ப்பாணம், ஏப்.4

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகள் இணைத்தளம் மூலம் திங்கள் இரவு வெளியாகின.

பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில், சாதாரண தர பரீட்சை முடிவுகளை திங்கள் இரவே பார்க்கக்கூடியதாக இருந்தது.

ஆனால், நேற்றுக் காலையிலிருந்தே நகரப் பாடசாலைகள், தனிப்பட்ட மாணவர்கள் என்று எல்லோரும் பரீட்சை முடிவுகளைப் பார்ப்பதற்கு முண்டியடித்ததால் நெருக்கடி காரணமாக இணையத்தளத்தின் வேகம் குறைந்து காணப்பட்டது.

நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளும், மாணவர்களும் பரீட்சை முடிவுகளை அறிவதற்காக இணையத்தளத்தைப் பார்க்க முண்டியடித்தமையும் அதன் வேகம் குறைந்ததற்கு முக்கிய காரணமாகும்.

அதன் விளைவாக மிகப் பெரும்பாலான பாடசாலைகளின் (04ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி அமைச்சர் மீண்டும் ஐ.தே.கவில்!

ரயில்வேத்துறை பிரதி அமைச்சர் எட்வின் குணசேகரா நேற்று மீண்டும் எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தமது சிறப்புரிமை குறித்து உரையாற்ற சபாநாயகரின் அனுமதியைக் கேட்டார். அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் ஆளுங்கட்சியினர் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து ஆரவாரம் செய்தனர். நாடாளுமன்றில் நேற்று நீண்ட உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், சபைக்கு வெளியே போய்விட்டு மீண்டும் திரும்பி வந்தார்.

அவருடன் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அணி திரண்டு வந்தனர். அவர்களுடன் எட்வின் குணசேகராவும் காணப்பட்டார்.

இவர் கம்பஹா மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். அண்மையில் அணிமாறும் கரு ஜெயசூரியாவுடன் அரசாங்கத் தரப்பில் சேர்ந்து பிரதி அமைச்சரானார். (அ)

## 'சர்வஜன வாக்கெடுப்பு' செய்தி பொய் என்கிறார் ரம்புக்வெல

கொழும்பு, ஏப்.4

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்வதா இல்லையா என்பது குறித்து அரசு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் என வெளியான செய்தியில் உண்மையில்லை. அரசு இது குறித்து ஆராயவில்லை என்று பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை கொழும்பு கிராமோதய நிலையத்தில் நடைபெற்றது. அமைச்சர் அங்கு தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

இந்தச் செய்தி எவ்வாறு வெளியிடப்பட்டது என்பது குறித்து அரசு விசாரணை நடத்தும். சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் இச்செய்தி திட்டமிட்டு வெளியிடப்பட்டுள்ளது - என்றார்.

செய்தியாளர்:- நீங்கள் தனியார் ஊடகங்கள் பொறுப்பற்ற முறையில் செய்திகளை வெளியிடுகின்றன என குறைகூறுனீர்கள். ஆனால் அரச ஊடகமே மேற்கண்ட செய்தியை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள்?

அமைச்சர்:- இது குறித்து இப்போது விசாரணை நடத்தி வருகின்றோம். இன்று மாலைக்குள் இது தொடர்பாக எடுக்கவுள்ள நடவடிக்கை பற்றி அறிவிப்போம். - இவ்வாறு ரம்புக்வெல பதிலளித்தார்.

விடுதலைப் புலிகளுடன் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு

(04ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சைப் பெறுபேறுகள் இன்று யாழ். வந்து சேரும்

ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று விமானம் மூலம் எடுத்துவரப்படுகின்றன. யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. பலாலியில் இருந்து எடுத்து வரப்பட்டதும், பெறுபேறுகளை பாடசாலைகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வவுனியாவில் ஊர்காவலர் காயம்

வவுனியா மாமயிலங்குளம் பகுதியில் நேற்று மாலை 5.40 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் இரு ஊர்காவல் படையினர் காயம் அடைந்தனர்.

அவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர். (அ-1-164)

## வெள்ளையர்கள் எங்களுக்கு சட்டம், ஒழுங்கை கற்பிக்கமுடியாது

### சர்வதேச மன்னிப்புச் சபையைச் சாடுகிறார் வீரவன்ச

கொழும்பு, ஏப்.4

வெள்ளையர்கள் எங்களுக்கு சட்டம் ஒழுங்கு பற்றிக் கற்பிக்க முடியாது. சட்ட வரம்புக்கு உட்படாத நாடாக இலங்கையைக் காட்ட முயல்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை.

இலங்கை கிரிக்கெட் அணிமீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விடுதலைப் புலிகளுக்கு உதவவே அவர்கள் முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையைக் கண்டித்தார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

மேற்கிந்தியாவில் இடம்பெற்றுவரும் உலகக் கிண்ண கிரிக்கட் போட்டியில் கலந்துகொண்டு விளையாடி வரும் இலங்கை கிரிக்கட் அணி சட்ட ஒழுங்கின்படி செயற்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்திருந்தது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## பாம்பன் மீனவர்கள் கற்பிட்டிக்கு கொண்டுசெல்லப்பட்டுச் சித்திரவதை!

சென்னை, ஏப்.4

நடுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 14 தமிழக மீனவர்களை, இலங்கைச் சிங்கள மீனவர்கள் கடத்திச் சென்று மூன்று நாள்கள் தடுத்துவைத்து, சித்திரவதை செய்தனர் என் கூறப்படுகிறது.

கடந்த 28ஆம் திகதி பாம்பனில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 14 தமிழக மீனவர்களை, இலங்கை மீனவர்கள் கடத்திச் சென்று புத்தளத்தில் உள்ள கற்பிட்டியில் வீடு ஒன்றில் தடுத்துவைத்தனர். அங்கு வைத்து அவர்களை சிங்கள மீனவர்கள் தாக்கிச் சித்திரவதை செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் பாம்பன் கரை வந்து சேர்ந்தனர்.

6 விசைப் படகுகளில் சிங்கள மீனவர்கள் விரைந்து வந்தனர். அவர்களது கைகளில் உருட்டுக்கட்டை, அரிவாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்கள் இருந்தன. பாம்பன் மீனவர்களைச் சுற்றிவளைத்து கடுமையாக தாக்கிய அவர்கள் 3 படகு

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதிவெடி விழிப்புணர்விற்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினம் - ஏப்ரல் 04
சர்வோதயம் (சி/48853) வெண்புறா யுனிசெவ்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விய வருடம் பங்குனி மாதம் 22ஆம் நாள் (05.04.2007) வியாழக்கிழமை பகல் 10.39 மணிமுதல் 12.38 மணிவரையுள்ள இடப இலக்கினமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்



| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் | எமது கனிஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **மகேந்திரராஜ்** | **கீர்த்திகா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

எல்லாம்வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு. திருமதி மு.சுப்பிரமணியம் | திரு. திருமதி கா.அம்பலம் |
| (இளைப்பாறிய அதிபர்) | (அருள் ஆனந்தா ரெக்ஸ்ரைல்) |
| மாவடி ஆலய வீதி, சங்கானை. | பிரதான வீதி, சங்கானை. |

M K

(இரு வீட்டார் அழைப்பு) (சி/48867)

---



யாழ்ப்பாணம்

## அத்தியடி பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா

மேற்படி திருத்தலத்தின் வருடாந்த பெருந் திருவிழா பங்குனி 23ஆம் நாள் (06.04.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 13.04.2007(வெள்ளி) மாலை சப்பரத் திருவிழாவும் 14.04.2007(சனி) புதுவருடத்தினத்தன்று காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஆலய நிர்வாகத்தினர்.

விளம்பர அன்பளிப்பு:
நியூ பிரியங்கா நகைமாளிகை 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(59254)

---

## வெளிமாவட்டக் கல்விசார், சாரா உத்தியோகத்தர்களுக்கான அவசர கலந்துரையாடல்

இடம் : யாழ்.கல்வி வலயப் பணிமனைக்கு அருகில்.
திகதி : இன்று (04.04.2007) புதன்கிழமை.
நேரம் : காலை 7மணி
விடயம் : மிக முக்கியமான தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பதால்.

- பாதிக்கப்பட்டவர்கள்.
(59279)

---

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

நிகழும் மங்களகரமான விய வருடம் பங்குனித்திங்கள் 21ஆம் நாள் இன்று (04.04.2007) புதன்கிழமை மு.ப. 10.43 மணி முதல் 12.02 மணி வரையுள்ள மிதுனலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**மகராசி நகை மாளிகை**

என்னும் புதுக்கடையை ஆரம்பிக்கவுள்ளதால், அத்தருணம் தாங்கள் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

இல.51, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்கள் பாலா, இளங்கோ.
(59281)

---

## Vacancy

HTML, VB, $C^{++}$, Java, VB Script, Java Script தெரிந்தவர்கள் தேவை.
06.04.2007 இற்கு முன் விண்ணப்பிக்கவும்
விளம்பர இல. 2960
மே/பா உதயன்

---

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமை புரிந்து யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலராகக் கடமை புரிந்தவருமான

**ஸ்ரீபன் ஜெயபாலா செல்லத்துரை**

(இல. 45, றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்)

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களும், பிரதேச செயலக நலன்புரிச் சங்கம், கோப்பாய். (சி/48861)

---

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பனும் சிறந்த முன்னாள் விளையாட்டு வீரனுமாகிய

**துரைசிங்கம் தேசியநாதன்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த துயரம் அடைவதோடு அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- புங்கன்குளம் நண்பர்கள்.
(59253)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் யோ.ஜெகானந்தம் அவர்களது அன்புத்தாய்

**யோகானந்தம் ஜெகஜெனனி**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், தொக்குவில் இந்துக் கல்லூரி.
(59245)

---

## ENGLISH MEDIUM

Gr.9,10
★ Science & Maths
*Mr. D.Shelton*
**A/L 2009**
★ கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் & ஆங்கில வகுப்பு
**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.

---

## The Royal College of Jaffna

ஆங்கிலத்தில் சுலபமாகக் கதைக்க, பயில மற்றும் இலக்கணம், வினா விடை வகுப்புகள் By: விக்னேஸ்வரன் ஆச்சாரி. 5ஆவது பிரிவு ஆரம்பம் (வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்.) பிளாக் வீதி, சங்கானை.
The Royal is the Best

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் நடன ஆசிரியை

**திருமதி தமிழ்மலர் சந்திரகுமார்**

அவர்கள் 02.04.2007 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.
(சி/48889)

---

## விற்பனைக்கு

1) Photocopy Machine Digital with Printer
2) Deck 3) Street 100 Hero Honda 4) C-50 Hero Honda(Self Start) 5) Singer Machine(Zigzag)
6) Water pump Motor
T.P. 2226666(2.00p.m. - 4.30 p.m.)

---

## தவறிவிட்டது

தெட்சணாமூர்த்தி சபேசனுடைய தேசிய அடையாள அட்டை (871713839V) கந்தர்மடத்திற்கும் கோண்டாவிலுக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 283/13, புகையிரத வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தொ.பே. 0776534186 தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

---

## மரண அறிவித்தல்கள்

### வைத்தியநாதர் ஐயம்பிள்ளை நல்லதம்பி

(பிரபல வர்த்தகர், புதுக்கடை, நெடுந்தீவு மேற்கு.)



நெடுந்தீவு மேற்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வை.ஐ.நல்லதம்பி 02.04.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் சார்பில்,
க.நா ராசசிங்கம்(மருமகன்)
3ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

### துரைரட்ணம் மகேந்திரன்

(ஓய்வு பெற்ற நில அளவையாளர், தலைவர், மானிப்பாய் பரிஷ் அரிமா கழகம்)



மானிப்பாயைச் சேர்ந்த துரைரட்ணம் மகேந்திரன் 01.04.2007 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான துரைரட்ணம் - இண்ணுமணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான அராலியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் செல்வராணி, ஞானாம்பிகை, காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன் மற்றும் அருளானந்தம், மனோரஞ்சிதம், பத்மாவதி, சீதாலக்ஷ்மி, விமலாதேவி, தர்மேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அனுஷா (நீர்ப்பாசனப் பொறியியலாளர் திணைக்களம், வவுனியா), குலேந்திரன்(லண்டன்), சதீஸ்கரன் (லண்டன்), விஜயேந்திரன் (லண்டன்), சன்ஜிதா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஈஸ்பரநாதன் (Danish Refugee Council, வவுனியா), ஜெயின் (லண்டன்), வளர்மதி (லண்டன்), பன்னீர்ச்செல்வன் (கனடா) ஆகியோரின் மாமனும் சன்ஜீவன், வில்லியம், ஒலிவர், மாயா, இனேஷ், இஷான், அஸ்வின் ஆகியோரின் பாசமுள்ள பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2007) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அதிகார் செல்லமுத்து வீதியில் அமைந்துள்ள அன்னாரது 'பூ - கொட்டேஜ்' இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பூ-கொட்டேஜ்"
அதிகார் செல்லமுத்து வீதி, மானிப்பாய்.
தொ.பே.:021 222 5861.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 ★ 10 ★ 1933 | 30 ★ 03 ★ 2002 |

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் இராமலிங்கம் பாலசுப்பிரமணியம்**

இவ்வுலகில் உன் கடமை முடித்து - இனி
இங்கென்ன வேலையென இறைபதம்
அடைந்தீரோ ஐயா!

பிறவுண் றோட்,
இல.14, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

---

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 09/04/2006- 09.00

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
Batch I : 06/04/2007, Batch II: 07/04/2007
Batch III: 08/04/2007, Batch IV: 11/04/2007

3 மாதகால Diploma in Computerized Accounting புதிய பிரிவுகள் 06/04/2007, 07/04/2007, 08/04/2007ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# பஞ்சாயத்து முறையின் கீழ் அதிகாரப் பகிர்வு அபத்தம்

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு ('சார்க்') மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு பல்வேறு பிரமுகர்களையும் சந்தித்துப் பேசி வருகின்றார். அவர்களுள் ஒருவர் அவரது நெருங்கிய நண்பரும் பஞ்சாயத்துத் துறைக்கான இந்திய மத்திய அமைச்சருமான மணிசங்கர ஐயர் என்று தெரிவிக்கப்பட்டது.

பஞ்சாயத்து நிர்வாக முறையை குறித்து இந்திய அமைச்சரிடம், இலங்கை ஜனாதிபதி கேட்டுத் தெரிந்துகொண்டார் என்றும் கூறப்படுகின்றது.

இலங்கையின் தேசியச் சிக்கலாக உருவெடுத்திருக்கும் இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண்பதற்கான தெற்கின் முன் யோசனைகளை சிபாரிசு செய்யும் நோக்குடன் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஒன்றை மஹிந்தரின் அரசு சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் அமைத்திருந்தது. அதன் தலைவராக அமைச்சர் டியூ குணசேகரா நியமிக்கப்பட்டார்.

அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர், கருத்து வெளியிட்ட அமைச்சர் டியூ குணசேகரா, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் 'பஞ்சாயத்து ராஜ்' அதிகாரப்பகிர்வு முறை நல்ல முன்மாதிரி என்று அதை சிலாகித்துக் கூறியிருந்தார்.

போதாக்குறைக்கு, இலங்கையில் அமைதித் தீர்வுக்கு இந்தியாவின் 'பஞ்சாயத்து ராஜ்' அதிகாரப்பகிர்வு முறை நல்ல முன்மாதிரி அடிப்படை என்பதால், இந்தியாவுக்குச் சென்று, அதை நேரடியாக ஆய்வு செய்து, விடயங்களைக் கண்டறிந்து வருவதற்காக இந்திய விஜயம் ஒன்றையும் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து அவர் மேற்கொண்டார்.

அப்போதே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் பஞ்சாயத்து ஆட்சி முறையிலான தீர்வு என்ற பேச்சு 'மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் வேலை' போன்றது என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இலங்கையின் சிறுபான்மையினரான தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையே இன்று இலங்கைத் தீவில் உக்கிர உள்நாட்டுப் போருக்குக் காலாகியிருக்கிறது. தமிழர் தாயகத்துக்கு, கௌரவத்துடன் கூடிய வாழ்வியலுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டமையாலேயே தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்து இவ்வாறு குரூர வன்முறைப் போராக வெடித்தது என்பது கண்கூடு.

ஆகவே, தமிழர் தாயகத்துக்கு உரிய அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்கலாம். அதுவே சிறந்த - நியாயமான - வழிமுறையுமாகும்.

ஆனால், பௌத்த - சிங்களப் பேரினவாதத்திலும் மேலாண்மைச் சிந்தனையிலும் புதைந்து கிடக்கும் தென்னிலங்கை, ஈழத்தமிழர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்க்கின்றது.

வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்துக்கு அதிகாரம் பகிரப்படுவதைக் கடுமையாக எதிர்க்கும் தென்னிலங்கைச் சிங்களத் தீவிரவாதிகளின் கட்சியான ஜே. வி. பி., அதற்குப் பதிலாக கிராமங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்படலாம் என்ற உப்புச்சப்பற்ற கருத்தியலையும் முன்வைக்கின்றது.

அந்தக் கருத்தியலுக்கு வடிவம் கொடுக்கும் முயற்சியே இந்தியாவின் 'பஞ்சாயத்து ராஜ்' முறையிலான அதிகாரப் பரவலாக்கத்தை இலங்கைக்கும் முன்மாதிரியாகக் கொள்ளும் எத்தனம் என்பதும் இங்கு வெளிப்படையாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை மத்தியில் ஓர் அரசு இருந்தாலும், மாநிலங்களுக்கு தனி மாநில அரசுகள் என்ற அந்தஸ்துடன் அதிகாரப்பகிர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த அதிகாரப்பகிர்வு அலகின் கீழ், கிராமங்களுக்கு அதிகாரங்களை மேலும் பரவலாக்கும் அம்சமாகவே கிராமப் பஞ்சாயத்து முறை பரிசீலிக்கப்படுகின்றது. அது கூட இன்னும் இந்தியாவில் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆக, இந்தியாவில் மூன்றாம் மட்ட அதிகாரப் பகிர்வு செயற்பாட்டை - அது இந்தியாவிலேயே வெற்றியளிக்கவில்லை என்பதைத் தெரிந்திருந்தும் கூட - அதனை, இலங்கைக்கு இரண்டாம் கட்ட அதிகாரப் பகிர்வுக்கு அடிப்படையாகக் காட்ட முயல்கின்றது தென்னிலங்கை.

தமிழர்கள் தனிநாடு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டு சுமார் 35 ஆண்டுகள் கடந்துவிட்டபின்னர் - அதற்கான விடுதலைப் போராட்டம் கோர யுத்தமாக வெடித்து, பெரும் இரத்த ஆறு இலங்கைத் தீவில் பெருக்கெடுத்தோடும் இந்தச் சூழ்நிலையில், கிராமப் பஞ்சாயத்து முறைத் தீர்வுக்கான தளமாகப் பயன்படுத்த தென்னிலங்கை முயற்சிப்பது, ஈழத் தமிழர்களையும் அவர்களது உரிமைப் போரையும் கேலிக்கும் கிண்டலுக்கும் உட்படுத்தும் செயற்பாடாகும்.

தரைப்படை, கடற்படை என்பவற்றைத் தாண்டி தனக்கெனத் தனியான விமானப்படையை உருவாக்கும் தேசக்கட்டமைப்பு மட்டத்துக்குத் தமிழர் தாயகம் தன்னை விருத்தி செய்து ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில், கிராம மட்டத்திலான 'கட்டைப் பஞ்சாயத்து' அடிப்படையிலான தீர்வு குறித்து தென்னிலங்கை பரிசீலிக்க முயற்சிப்பது அபத்தமன்றி வேறில்லை.

தென்னிலங்கை பௌத்த - சிங்களத் தீவிரவாதிகளைத் திருப்திப்படுத்தும் திட்டம் ஒன்றே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாகும் எனக் கொழும்பு கருதுமானால் இப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வே சாத்தியமல்ல என்பதே முடிவாகிவிடும்.

எனவே, எந்த வழித் தீர்வு என்பதைக் கொழும்பு தான் முடிவு செய்யவேண்டும்.

# பூர்த்திசெய்யப்படாத திட்டங்களுக்கே சிமெந்து வழங்கச் செயலகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 4

'வின்ரன்' கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்ட சிமெந்தினைப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ள பொது வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கு யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக, முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்களுக்கு இந்த சிமெந்து பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகாரணமாக அபிவிருத்திப் பணிகளுக்கான மூலப்பொருள்கள் இன்மையால் தடைப்பட்டிருந்தன.

குறிப்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பொது வேலைத்திட்டங்கள் அனைத்தும் சிமெந்து இல்லாமையால் முடக்கியிருந்தன.

இதன் காரணமாக அவற்றுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலை காணப்பட்டது. இதனையடுத்து அரச அதிபர் மேற்கொண்ட நடவடிக்கையினால் இதுவரை பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ள வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சிமெந்து வழங்க முடிவாகி உள்ளது.

பிரதேச செயலர்களின் சிபார்சுக்கு அமைவாகவே இந்த சிமெந்து விநியோகம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த சிமெந்தினைப் பெற்று உடனடியாக வேலைத்திட்டங்களை ஆரம்பிக்குமாறு யாழ். செயலகம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது. (அ-8)

# மிதிவெடி விழிப்புணர்வு சர்வதேச தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 4

மிதிவெடி விழிப்புணர்வுக்கும் பங்களிப்பிற்குமான சர்வதேச தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

அதனையொட்டிய நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு, நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறுகிறது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி கலந்துகொள்வார்.

மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கடன் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். இந்த நிகழ்வை யுனிசெவ்வின் அனுசரணையுடன் சர்வோதயம் நடத்தவுள்ளது. (அ-1)

# சாரதி அனுமதிப்பத்திரம்; இன்று முதல் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 4

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான எழுத்துமற்றும் செயல்முறைப் பரீட்சைகள் இன்று மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனை மோட்டார் திணைக்கள யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் வி. பத்மநாதன் தெரிவித்தார்.

விண்ணப்பம் செய்த பரீட்சார்த்திகளை தங்களுக்குரிய எழுத்து மற்றும் செயன்முறைப் பரீட்சைகளுக்கான திகதிகளை அலுவலக நாள்களில் நண்பகல் 12 மணிக்கு முன்னர் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலுகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (203)

# கடைசிபஸ் சேவை பிற்பகல் 4 மணிக்கு

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து அனைத்துப் பாதைகளுக்குமான கடைசி பஸ்கள் மாலை 4 மணிக்குப் புறப்படும் என போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில தினங்களாக இந்த நடைமுறை பின்பற்றப்படுவதாக அவை மேலும் கூறின.

ஊரடங்கு நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை காரணமாகவே கடைசி பஸ்கள் புறப்படும் நேரமும் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி போக்குவரத்துச் சபையின் அனைத்துப் பாதைகளுக்குமான கடைசி பஸ்கள் மாலை 4 மணிக்கு யாழ். மத்திய பஸ்நிலையத்தில் இருந்து புறப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-8)

# கொள்ளை மற்றும் துஷ்பிரயோக சந்தேக நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஏப். 4

நாயன்மார்கட்டுப் பகுதியில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற கொள்ளை மற்றும் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாயன்மார்கட்டு - கல்வியங்காட்டு எல்லைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த ஒரு கும்பல் அந்த வீட்டில் இருந்து 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றதோடு -

அதே வீட்டில் இருந்த இளம் பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியது என்றும் - தெரிவித்து பொலிஸார் அறிக்கை ஒன்றை பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு முன் நேற்று மாலை சமர்ப்பித்தனர்.

அந்த அறிக்கையை ஆராய்ந்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்க மறியிலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (அ-1)

# ICC Cricket World Cup West Indies 2007 — உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி 2007

## நியூசிலாந்து வெற்றி

மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'சுப்பர் - 8' ஆட்டத்தில் நியூசிலாந்து அணி பங்களாதேஷ் அணியை 9 விக்கெட்டுக்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 48.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 29.2 ஓவர்களில் 1 விக்கெட்டை மட்டும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்ரீபன் பிளமிங் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்டநாயகனாக பந்து வீச்சில் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய நியூசிலாந்தின் ஷேன் பொன்ட் தெரிவானார்.

**இன்றைய ஆட்டம்: ★ இலங்கை எதிர் இங்கிலாந்து**

# நாளை கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 4

இணுவில் மஞ்சத்தடி முத்துமாரி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. இன்று நண்பகல் 12 மணிமுதல் மாலை 5 மணி வரை எண்ணெய் காப்பு சாத்தல் இடம்பெறும். (1)

# இன்று

யாழ்ப்பாணம், ஏப். 4

உடுவில் மகளிர் கல்லூரி நடத்தும் 'கலங்காதீர்...' உயிர்ப்புப் பஜனை இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

# பாதுகாப்புப் பொறுப்பை தகுதியானோரிடம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தப்படும் அபாய எச்சரிக்கைப் பரிமாணமாகும்.

**இலங்கையின் இராணுவத் தகைமை நிலை மாறுகிறது**

ஒன்று அல்லது இரண்டு விமானங்கள் - அவற்றின் ரகம் மற்றும் வலிமை பற்றிய விடயங்கள், அரசு இப்போது பணித்துள்ள விசாரணைகளின் பின்னரே தெரியவரக் கூடியவை - வடக்கில் வன்னிக்காட்டுப் பகுதியிலிருந்து புறப்பட்டு, நானூறு கிலோமீற்றர் பயணித்து, இலங்கை விமானப்படையின் பிரதான தளத்தின் மீது குண்டுகளை வீசிவிட்டு, அதுவும் வானில் இரண்டு மணிநேரம் பயணித்துவிட்டு, எதிர்ப்பேதுமின்றி புலிகளின் விமானப்படைத் தளம் எனக்கூறப்படும் இடத்துக்குப் பாதுகாப்பாகத் திரும்பியிருக்கின்றமை - குறைந்தபட்சம் - குழப்பம் தரும் விவகாரம்தான். இந்தப் பின்னணியில் தான், சிக்கலில் மாட்டியுள்ள இலங்கையில் இராணுவத் தகைமைநிலை மாறுவது குறித்து உலகம் கவனிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது." - என அந்த ஆசிரிய தலையங்கம் குறிப்பிடுகின்றது.

இந்தச் சமயத்தில் பயத்தோடும் பீதியோடும் இலங்கை மக்கள் என்ன நினைக்கின்றார்களோ அதை அப்படியே கனகச்சிதமாக இத்தலையங்கம் பிரதிபலிக்கின்றது. இராணுவ வெற்றிகள் கிடைத்திருப்பதாக அரசு உரிமை கோரும் சமயத்தில் - கிழக்கிலிருந்து புலிகள் துப்புரவு செய்யப்பட்டு புலிகளின் யுத்த இயந்திரம் செயலிழக்கச் செய்ய வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கூறும்வேளையில் - இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது.

புலிகளின் விமானப் படைகுறித்தும் ஓடுபாதை குறித்தும் 2005 இலிருந்தே தனக்குத் தெரியும் என்று அரசு அறிவித்துள்ளது. அப்படியானால் இத்தகைய தாக்குதல் இடம்பெற எவ்வாறு அனுமதிக்கப்பட்டது? இந்தப் பாதுகாப்புத் தகவலுக்கு யார் பொறுப்பு?

இலங்கை அரசின் மூலக்கடமையான - நாட்டின் இறைமையையும் மக்களையும் பாதுகாக்கின்ற - நடவடிக்கையைத் தான் நிறைவேற்று வதாக இந்த அரசு கூறுவது நம்மை முட்டாளாக்கும் வேலை.

இந்தப் பொதுக்கடமையை ஆற்றத் தவறிய குற்றத்துக்கு இதுவரை எவரும் - பாதுகாப்பு அமைச்சர் முதல் விமானப்படைத் தளபதி வரை எந்த அதிகாரியும் - பொறுப்பேற்கவில்லை. இறுதியாக, இந்தத் தேசியக்குற்றத்துக்குப் பொறுப்பேற்க எவருமில்லை.

**சர்வதேசத்துக்கும் பதில் கூறவேண்டியுள்ளது**

புலிகளின் விமானத் தாக்குதல் அரசின் தந்திரோபாயம் குறித்து அடிப்படைக் கேள்விகளை எழுப்புகின்றது.

பேச்சு மூலமான அரசியல் தீர்வே இலக்கு என்கிறது அரசு. யுத்த நிறுத்தத்தை முன்னெடுத்து அனைத்துக் கட்சிக் கூட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது அதற்கு சான்றுகள். அதே சமயம் புலிகளை நிர்மூலமாக்கும் இலக்கோடு இராணுவத் தீர்வையும் அரசு முன்னெடுக்கின்றது என்பது வெளிப்படையானது. இந்த வழிமுறைக்கே கட்டுநாயக்கா விமானத் தாக்குதல் கடுஞ்சவாலாக வந்திருக்கின்றது. அரசின் இத்தகைய முரண்பாடான கொள்கைப் போக்குக்குத் தகுந்த விளக்கம் தரப்பட வேண்டும்.

உங்களின் அத்தகைய இரட்டை வேடப் போக்கின் விளைவுகளுக்காக நீங்கள் உங்கள் மக்களுக்கு மாத்திரமல்ல சர்வதேச சமூகத்துக்கும் பதில்கூற வேண்டியிருக்கின்றது.

அரசியல் பேச்சுமூலமான தீர்வில் நாம் எல்லோரும் மாறாமல் உறுதியாக இருக்கின்றோம். நீண்ட காலமாக - மிகுந்த எதிர்பார்ப்போடு - காத்திருந்த பிரதான கட்சிகள் இடையேயான இணக்கம் என்ற புரிந்துணர்வு உடன்பாடு ஐ.தே.க. மற்றும் ஸ்ரீல.சு.க. இடையே செய்யப்பட்டது. இந்தச் செயற்பாட்டில் அது ஒரு மைல்கல். அந்தப் புரிந்துணர்வு உடன்பாடு அதற்கான நிகழ்ச்சித்திட்டம் வகுக்கப்பட்டு அதனடிப்படையில் செயற்படுத்தப்பட்டிருந்தால் இந்த மோசமான கட்டுநாயக்கா விமானத் தாக்குதலோ அதன் தொடராக எமது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் உல்லாசப்பயணத்துறை வீழ்ச்சி, வெளிநாட்டு முதலீடு மற்றும் பங்குச்சந்தை சரிவு என்பன இடம்பெற்றிருக்காமல் தவிர்க்கப்பட்டிருக்கும்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவை அரசு இழந்து விட்டது என்பது தெளிவு. மக்களை பாதுகாப்பதற்கு அரசு தவறிவிட்டது என்பதால் எங்களைப் 'பறையர்' தேசமாகவே நடத்துகின்றார்கள். இப்போது அரசு மனித உரிமைகள் மீறலுக்காக ஜெனிவாவில் மனிதஉரிமைகள் கவுன்ஸிலின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்பட்டுள்ளது.

**அடக்குமுறையால் மக்கள் நிர்ப்பந்தம்**

சட்டத்துக்கு முரணான அரசின் செயற்பாடு பெரும் அடக்குமுறையாகியுள்ளது. அதனால் சிவில் சமூகம் அச்சுறுத்தப்பட்டு நிசப்தமாக்கப்பட்டுள்ளது. ஆட்கடத்தல்களும், காணாமற்போதல்களும் கட்டுப்படுத்தப்படாமல் மனித உரிமைகள் மீறல்கள் தினசரி அதிகரித்துள்ளன. கிழக்கில் இடம்பெயர்ந்த ஒன்றரை இலட்சம் பேர் உணவோ தங்குமிடமோ இன்றி அவலப்படுகின்றார்கள். தனியார் ஊடகங்களின் குரல்வளை நசுக்கப்பட்டு குரல் இழந்துள்ளன. மக்கள் வெள்ளைவான் அச்சத்தில் வாழ்கின்றார்கள். குற்றப் புலனாய்வு அதிகாரிகளின் அதிரடிப் பாய்ச்சல்கள் மூலம் தற்சமயம் செயற்பாட்டிலேயே இவ்வாறு உள்நாட்டு இறைவரி மீறல்களின் கீழ் நிறுவனங்கள் தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுகின்றன. இது குறித்தெல்லாம் ராஜபக்ஷ அரசு அலட்டிக் கொள்வதேயில்லை.

மக்களை இந்த நெருக்கடிக்குள் ஆழ்த்தும் இச்செயற்பாடு குறித்து நாம் என்ன செய்யமுடியும். இந்த நெருக்கடியைத் தாண்டி வருவதற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற முறையில் நாம் கூட்டாக செயற்பட வேண்டும். வெளிப்படையாகவும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதத்திலும் செயற்படுவதே இப்போது முக்கியமானது.

**அனைத்துக் கட்சிக் கூட்டம்; மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்**

அமைதி முயற்சிகள் மீள ஆரம்பிக்கப்படுவது உறுதியாக அவசியமானது.

ஆனால் அரசோ சதா எந் நேரமும் "வடக்கு - கிழக்குப் பிரச் சினையை பேச்சுமூலம் தீர்க்கத் தயார். அதற்கான கதவுகள் திறந்தே உள்ளன." - என்ற சாரப்படக் கூறுவதோடு சரி. அதற்கு அப்பால், அதற்காக உறுதி யான நடவடிக்கை எதனையும் தனது சமாதானச் செயலகம் மூலம் அரசு மேற்கொள்வதேயில்லை.

அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தைப் பொறுத்தவரை, அடிக்கடி ஒத்திவைக்கப்பட்டு தள்ளிப் போடப்பட்டு வரும் அது குறித்து மக்கள் களைத்து நம்பிக்கை இழந்துவிட்டார்கள். எங்களிடம் நிபுணர்கள் அணியின் பெரும்பான்மைக்குழுவின் அறிக்கை, சிறுபான்மைக்குழுவின் அறிக்கை, ஏன் தலைவரின் இணக்க ஆவணம் எல்லாம் உள்ளன. இறுதி அறிக்கை மார்ச் 15இல் வரும் என்று எங்களுக்குக் கூறினார்கள். ஆனால் மார்ச் முடிவில் மேலும் இரண்டு மாதங்கள் தேவை என்கிறார்கள். காலக்கெடுகள் தொடர்ந்து பின்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உண்மையில், சிக்கலான இப்பிரச்சினைக்கு பேச்சு மூலமான அரசியல் தீர்வுகாணும் நோக்கம் அரசுக்கு இல்லையா?

**இராணுவ நடவடிக்கை மூலம் தீர்க்க முடியாது**

இராணுவ நடவடிக்கைகள் மூலம் நாம் தீர்க்க முடியாது. அப்படிச் செய்ய முடியும் என்றால் நாம் எப்போதே இதனைத் தீர்த்திருப்போம்.

இந்த அரசின் செயற்பாடு மக்களை ஒன்றிணைக்கவில்லை. மாறாக, பிரித்து வைத்திருக்கின்றது. பேச்சு மூலமான தீர்வு மூலம் மட்டுமே நமது நாட்டுக்கு அமைதியை மீளக் கொண்டுவர முடியும்.

இலங்கையராகிய எங்கள் மக்கள் அனைவரும் - அவர்கள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் யாராக இருந்தாலும் - நாட்டின் ஆள்புல ஒருமைப்பாடு பேணப்படவேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஜனநாயக அடிப்படையில் அனைத்து சமூகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படும் பேச்சு மூலம் அரசியல் தீர்வைக் காண்பதற்கு நாம் அனைவரும் திட சங்கற்பம் செய்துகொள்வோமாக. அப்படிச் செய்வதன் மூலம் இலங்கையின் ஐக்கியத்தைப் பேணுவதற்கு எங்கள் மக்களினதும் சர்வதேச சமூகத்தினதும் ஆதரவைத் திரட்டிக் கொள்வோமாக.

இறுதியாக -

அரசியல் பேச்சு மூலமான தீர்வை எட்டும்வரை, தேசியப் பாதுகாப்புக்கு பொறுப்பாகத் தகுதியானோரை வைத்திருப்பதன் மூலம் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் இராணுவப் பின்னடைவுகளை எதிர்கொண்டு அதன் மூலம் பேச்சு மேசையில் எங்களை மேலும் பலவீனப்படுத்தாமல் இருக்க வேண்டுமானால் உரிய ஆளணியினரில் மாற்றம் கொண்டு வருவது கட்டாயமாகும். என்றார் அவர். (சி)

## நாளை

பங்குனி - 22
வியாழக்கிழமை
05.04.2007
திதி: திருதியை
பின்னிரவு : 04.36
நட்சத்திரம்: சுவாதி
பிற்பகல் : [illegible]
சுபநேரம் : 07.39 - 09.09
ராகுகாலம் : 01.39 - 03.09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத .... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டாவதுநாடாக 'சார்க்' அமைப்பில் சேர்ந்து கொண்ட ஆப்கானிஸ்தானின் அதிபரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாநாட்டில் ஆற்றிய உரையில், 'சார்க்' நாடுகளிடையே பொதுவான நாணயம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான யோசனையையும் வெளியிட்டார்.

'பயங்கரவாதம்' தொடர்பாக ஜனாதிபதி தனது உரையில் கூறியதாவது:-

தனது பாதுகாப்பைப் பேணாமல் எந்த நாடும் தன்னைத் தானே தாக்குப் பிடித்துக் கொள்ளவோ செழிப்படையவோ முடியாது. தேசியப் பாதுகாப்பை ஸ்திரப்படுத்துவதை ஒட்டி, பயங்கரவாதத்தை அகற்றும் தமது உறுதிப்பாட்டை எந்த நாடும் மட்டுப்படுத்திவிட முடியாது.

'பயங்கரவாதம்' எங்கும் பயங்கரவாதம்தான். அது பூகோளத்தையே அச்சுறுத்தும் விடயம்.

எமது இந்தப் பிராந்தியங்கள் அனைத்தும் இது விடயத்தில் ஒன்றுபட்டுச் செயற்படாவிட்டால் எல்லை கடந்த பயங்கரவாதக் குழுக்கள் இந்தப் பிராந்தியத்தின் மற்றைய பகுதிகளை தங்களது சுவர்க்க பூமியாக்கிக் கொள்ளும். நவீன பயங்கரவாதம் பல்முனைப் பரிமாணத்தில் செயற்படுகின்றது. அவர்கள் அரசியல் ரீதியாக, இராணுவ ரீதியாக, நீதி ரீதியாக, கொள்கை ரீதியாக பல முனைகளில் செயற்படுகின்றார்கள்.

**அனைவரின் கவனத்தையும் ஈர்த்த புலிகளின் வான்தாக்குதல்**

ஆகவே, இந்த அச்சுறுத்தலை அகற்றும் நமது முயற்சியும் பல்முனைப் புக் கொண்டதாக, தாக்குப்பிடிப்பதாக, அவர்களின் மூல வளத்தை இலக்குவைத்து எட்டுவதாக அமையவேண்டும். பயங்கரவாதம் தொடர்பாக சர்வதேச உடன்பாட்டு விதிகளை நடைமுறைப்படுத்துவதில் முழு ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் நாம் செயலாற்ற வேண்டும்.

கட்டுநாயக்கா மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அண்மையில் நடத்திய வான்தாக்குதல் எங்கள் அனைவரது கவனத்தை ஈர்ப்பதாக அமைவதோடு, கொடூரமான பயங்கரவாதக் குழுக்களினால் எமது பிராந்தியம் முழுவதுமே பாதுகாப்பற்றதாகி உள்ளது என்ற உண்மையையும் அது உணர்த்துவதாக உள்ளது.

எனவே, பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் வகையில் பங்கரவாத எதிர்ப்புத் தந்திரோபாயத்தில் கூட்டாகச் செயற்பட முன்வருமாறு மேன்மைமிக்க இந்த அமைப்பை நான் கோருகின்றேன்.

பயங்கரவாதத்தை ஒழித்து, எமது மக்களுக்கு மிகப்பாதுகாப்பான இடமாக இலங்கையை உருவாக்குவதற்கு எனது அரசு மிகுந்த அழுத்தம் கொடுத்து செயற்படுகின்றது. பயங்கரவாதத்தை ஒடுக்கும் அதேசமயம், அது அரசியல் மேடை ரீதியாகவும் எதிர்கொள்ளப்பட வேண்டும் - என்று ஜனாதிபதி தெரிவித்தார். (சி)

## ஜி.சீ.ஈ..... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுகளையும் நேற்றுப் பெறமுடியவில்லை. ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் பலவற்றில் 'இன்ரநெற்' வசதி இல்லாததால், குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகள் முறையாகக் கிடைக்க இரண்டொரு தினங்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முற்கொண்டு கிடைத்த சில முடிவுகள் வருமாறு:-

**வேம்படி**

10 'ஏ' சித்தி -பா.துவாரகி, ந.சய்னுதா, ப.சுவர்ணா, ஞா.பவித்திரா, ச.யாழினி, ர.ரோகிணி, ச.கோபிகா, சோ.சரண்யா, ச.லக்ஷிகா, ப.டர்சிகா, இ.தனுஷா, வே.கிரிஜா, மா.றஜித்தா, வி.கவினா, உ.தனுஜா.

**யாழ். இந்து**

10 'ஏ' சித்தி - சிவராசா விமல், சண்முகலிங்கம் கௌசிகன், பிரேமகுமார் லோகபிரசாத், செல்வகுமார் செல்வநிஜிதன், கந்தசாமி சுரேஷ்குமார், பரமானந்தன் திருவரங்கன், புவிராஜ் நிரோஜன்.

9 'ஏ' சித்தி 30பேர். இவர்கள் ஆங்கில இலக்கியத்தில் 'ஏ' சித்தி பெறவில்லை.

**புனித பத்திரிசியார் கல்லூரி**

10 'ஏ' சித்தி - ஜோன் ஷெல்ற்ரன், ஜெ.லடிஸ் லாஸ், வி.ஷென்றோன்.

**மானிப்பாய் இந்து** -10 'ஏ' சித்தி - சி.சுபாங்கரன்.

**யாழ்ற்ரன் கல்லூரி** -9 'ஏ' சித்தி - சி.சுரேஷ்.

**சுன்னாகம் ஸ்கந்தா** -10 'ஏ' சித்தி - செல்வி வர்சனா தவராஜா.

## வெள்ளையர்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இது தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு சர்வதேச மன்னிப்புச்சபையைச் சாடினார்.

இலங்கை கிரிக்கட் அணி தற்போது இடம்பெற்று வருகின்ற உலகக்கிண்ணக் கிரிக்கட் போட்டியில் கலந்துகொண்டு வெற்றிகளை ஈட்டியுள்ளது. உலகக் கிண்ணத்தை எமது அணி கைப்பற்றும் வாய்ப்பு நிறையவே உண்டு.

ஆனால், வெள்ளைக்காரர்கள் அந்த வெற்றிகளைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. சர்வதேச மன்னிப்புச்சபை பல சர்வதேச அமைப்புகளுடன் சேர்ந்து இலங்கை அணி வீரர்களின் மன நிலையைப் பாதிக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வெள்ளையர்களின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக இந்த நாட்டு மக்கள் பொங்கியெழ வேண்டும். சர்வதேசமன்னிப்புச்சபையை அனைவரும் கண்டிக்க வேண்டும் - என்றார்.

இதனைத் தொடர்ந்து அரசின் சார்பில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் அதன்தலைவர்ரணில் விக்கிரமசிங்கவும் சர்வதேசமன்னிப்புச்சபைக்குக் கண்டனங்களைத் தெரிவித்தனர். (அ-சி)



### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

ஜோண்கெனடி - மேசிடா தம்பதியரின் செல்வப் புதல்வி

**ஆன் டெவ்னியா**

இன்று (04.04.2007) புதன்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை 15/1, 3ஆம் குறுக்குத்தெரு, பாஷையூரிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக்கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, ஜேர்மனியிலுள்ள பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், இத்தாலியிலுள்ள சித்தப்பா, பெரியம்மாமார், பெரியப்பா, மாமாமார், அண்ணன்மார், மச்சான்மார், மச்சாள்மார், அக்கா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் புனித அந்தோனியாரின் அருள்பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

ஆன் டெவ்னியா

(58275)

15/1,3ஆம் குறுக்குத்தெரு, பாஷையூர்.

தகவல்: சூ.ஜோண்கெனடி (அப்பா).

### முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 07 - 11 - 1944



மறைவு 15 - 04 - 2006

செல்வி அமரர்

**பாக்கியரத்தினம் இராமலிங்கம்**

(இளைப்பாறிய உப அதிபர், யா/ இணுவில் இந்துக்கல்லூரி) B.A.Dip in.Ed

அன்பான அத்தையே ஆதரவாய் எம்முடனே<br>
இன்பமொழிபேசி மகிழ் ஏந்திழையே – உம் பிரிவால்<br>
வெந்தணலிற் புழுவாய் நாம் வெந்து துடிக்கின்றோம்<br>
வந்திடுவாய் எம்மனத்தை தேற்ற.....

வட்டுவினி, இணுவில் மேற்கு, இணுவில்.

தங்கள் மீளாப்பிரிவில் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்கள்.



### விற்பனைக்கு

10 அடி Korean தயாரிப்பு டிஸ் அன்ரனா LNB உடன் விற்பனைக்குண்டு.

T.P.: 0777 283795.

கலை, வர்த்தக வெற்றித் தேர்விற்கு அன்றும் இன்றும் இனி என்றென்றும்

### விக்னா கல்வி நிறுவனம்

தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

பிரிவு 2

**A/L 2009**

கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம் 07.04.2007 (8மணி)

புதிய அனுமதிகள் இன்றுமுதல் வழங்கப்படும்.

## MICRO COMPUTER ACADEMY

**Institute of Information Technology**

பாடசாலை விடுமுறைக் காலத்தில்...

நீண்டகால அனுபவமிக்க விரிவுரையாளர்களின் சேவையின் கீழ் மிகக் குறைந்த கட்டணத்தில்

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 07.04.2007 8 a.m.

புதிய பிரிவுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**Diploma in Hardware Engineering**

Hardware பயிற்சிகள் fees 1800/=

- கணனி தொடர்பான அறிமுகம்
- கணனிப் பாகங்கள் பற்றிய விளக்கம்
- Assembling
- Repairing
- Bios Configuration
- Hard disk(Partition & formatting
- Trouble shooting & Maintenance

Software பயிற்சிகள்

- Operating system நிறுவும் முறை
- software installation
- Driver installation
- File updating & copying

**Diploma in Computrized**

Tally மற்றும் முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும் fees 2500/=

- Introduction to Computer
- Financial accounting
- Stock control
- Budgeting
- Fore casting
- Taxation(Including vat)
- Manual accounting
- Simply Accounting

**Diploma in Graphic Designing**

- Introduction to Computer
- Operating system(Windows XP)
- Adobe Photoshop
- Corel DRAW
- Macro media flash MX
- Cool 3D Studio
- 3D Album

fees 1800/=

**Diploma in**

| | |
|---|---|
| Microsoft Office | 1000/= |
| Internet Technology | 1500/= |
| Desktop Publishing | 1000/= |
| Webpage Designing | 1500/= |

மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளும் ஒரே நாளில் ஆரம்பமாகின்றன....

- பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.
- பயிற்சிக் கட்டணம் இலகு தவணைமுறையில் செலுத்தும் வசதி.
- கணனி தொடர்பான பூரண அறிவைப் பெறுவதற்கான உத்தரவாதம்.
- பயிற்சி நெறியின் முடிவில் எழுத்துப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை நடத்தப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

**MCA**

No. 328, Stanley Road, (Near the DMI)
Aariyakulam Junction, Jaffna.
SriLanka

பிரிவு 1 - 07.04.2007, பிரிவு 2 - 13.04.2007, பிரிவு 3 - 14.04.2007

(59226)

### சுப்றா(14) கல்வி நிறுவனம்

(சித்தன்கேணி)

**O/L DAY**

ஆரம்பம் 05.04.2007

வழமையான ஆசிரியர் குழு

### விக்னா பயர்மனர்

புவியியல் - திரு. பாபு

A/L - 2009

ஆரம்பம் 07.04.2007 (சனி)

ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

A/L 2007

Day Classes - Mon. - Fri. (11.30 a.m.)

Sat. - Sun. (10 a.m.)

Peper Classes - Sat. - Sun. (12 pm)

அலகுரீதியான மீட்டல் வகுப்பு

* அனுமதிகள் அலுவலகத்தில்

### CHEMISTRY

2008

ORGANIC

06.04.2007 வெள்ளி 4

DIAS BSc.(Hons)

COLLEGE OF CHEMISTRY

## பாம்பன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் 14 மீனவர்களைக் கடத்திச் சென்றனர். எங்கள் எல்லையில் வந்து மீன் பிடிப்பதால் எங்களுக்கு மீன்கள் கிடைக்கவில்லை. மேலும் எங்கள் வலைகளை தமிழக மீனவர்கள் அறுத்து எறிந்து செல்கின்றனர். எனவேதான் தமிழக மீனவர்களை எச்சரிக்கை செய்வதற்காக உங்களை கடத்தி வந்திருக்கிறோம் என்று கூறி அடைத்து வைத்தனர்.

3 நாள்கள் உருட்டுக்கட்டை அடிவாங்கியதுடன் சாப்பாடு எதுவும் சாப்பிடாததால் பாம்பன் மீனவர்கள் 14 பேரும் சோர்ந்து காணப்பட்டனர். கரைக்குத் திரும்பிய அவர்கள் தங்களைச் சிங்கள மீனவர்கள் கடத்திச் சென்று சித்திரவதை செய்தது தொடர்பாக மீன்வளத்துறை அதிகாரியிடம் புகார் செய்தனர். (அ-1)

## சர்வஜன வாக்கெடுப்பு.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொண்ட போர்நிறுத்தப்புரிந்துணர்வு உடன்படிக்கையின் எதிர்காலம் தொடர்பாகத் தீர்மானிப்பதற்காக நாட்டுமக்களின் கருத்தை அறிந்து கொள்ளும் நோக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தலாமா என்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்ற சாரப்பட அரசசார்புப் பத்திரிகையான 'சன்டே ஒப்சேவர்' கடந்த முதலாம் திகதி (ஞாயிறு) தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (சி)

### யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்

## க.பொ.த. உயர்தர அனுமதி - 2009

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகளுக்கான அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 16.04.2007 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(சி-48873)

வி.மாணிக்கம்<br>
அதிபர்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2006**

1. வணிக முதற்தேர்வு
2. வணிகமாணி பகுதி - I
3. வணிகமாணி பகுதி - II
4. வணிகமாணி பகுதி - III

மேற்படி பரீட்சைகளை 23.04.2007 (திங்கட்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. வணிக முதற்தேர்வு | 23.04.2007 - 04.05.2007 |
| 2. வணிகமாணி பகுதி - I | 07.05.2007 - 14.05.2007 |
| 3. வணிகமாணி பகுதி - II | 14.05.2007 - 19.05.2007 |
| 4. வணிகமாணி பகுதி - III | 21.05.2007 - 26.05.2007 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் வணிக முதற்தேர்வுக்கு தோற்றுபவர்கள் 16.04.2007 தொடக்கமும், வணிகமாணி பகுதி - I, பகுதி - II மற்றும் பகுதி - IIIக்கு தோற்றுபவர்கள் 23.04.2007 தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்.<br>
30.03.2007

(சி-48876)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாதம் மகாராணி அம்மா



தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 320, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாதம் மகாராணி அம்மா நேற்று (03.04.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதத்தின் (துறைமுக அதிகாரசபை, திருகோணமலை) அன்பு மனைவியும் விஜயராஜா (நோர்வே), விஜயராசா (மிற்சுயி சிமெந்து, திருகோணமலை), உதயராணி ஆகியோரின் அன்புத் தாயும் சாந்தலிங்கம் (விது தொலைத்தொடர்பகம்), தமிழ்ச் செல்வி (நோர்வே), சிமித்திரா ஆகியோரின் மாமியும் நோர்வேயில் வசிக்கும் குகனேசன், இதயராஜ், தேவராஜ், சுஜன், தினேஸ்குமார், லோஷன் மற்றும் டல்சியா, தினுஷியா, சுபா, சுதர்ஷன், கஜனி, டினோஜன் (மாணவர்கள், வைத்தீஸ்வராக் கல்லூரி), டன்சன், விதுஷா (திருக்குடும்ப கன்னியர்மடம்), நிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 320, மானிப்பாய் வீதி,<br>
யாழ்ப்பாணம்.<br>
தொ.பே.இல. 0776 279805 (59289)

தகவல்:<br>
N. சாந்தலிங்கம் (மருமகன்).

### கனகசபை தியாகராஜா

அராலி மத்தியைச் சேர்ந்த கனகசபை தியாகராஜா நேற்று (03.04.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் குணமணிதேவியின் அன்புக் கணவரும் பாமாவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குமாரவேலு மற்றும் தனபாக்கியம், அமரர் க. பேரம்பலம் (ஆசிரியர்), அமரர். க. இராஜேஸ்வரி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2007)புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பார்வதி பவனம்', அராலி மத்தி,<br>
அராலி. (59290)

தகவல்:<br>
அ. திருக்குமரன், அ. செந்தூர்க்குமரன் (பேரமக்கள்).

### செல்லத்துரை லிங்கநாதபிள்ளை

(ஓய்வுபெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர்)

யாழ்ப்பாணம், ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை லிங்கநாதபிள்ளை நேற்று(03.04.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் மகனும் சங்குவேலி, மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - வாலாம்பிகை தம்பதியரின் மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் துஷ்யந்தன்(ஆஸ்திரேலியா), வினோதினி(லண்டன்), தக்ஷாயினி (டுபாய்), கேதீஸ்வரன் (UNDP-DMAO) ஆகியோரின் தந்தையும் சாந்தினி, பரதன், சற்குணம், சுஜீந்திரா ஆகியோரின் மாமனும் சிவாஸ்கர், தரங்கினி, பார்கவி, அபிமன்யூ, மாதங்கி, சிவசுதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.7, ஐயனார் கோயில் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று(04.04.2007) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.: 021 222 5342

தகவல்:<br>
மனைவி, பிள்ளைகள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org